**தலைப்பு 10 - இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, இலஞ்சத்தை கண்டறிவதற்கான முற்பணக் கணக்கு என்பன இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளில் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 10 - இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடுதல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்டு உரிய தரப்பினரிற்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 13 ஆம் திகதி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக இலஞ்சம் அல்லது ஊழலகள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி ஒழுங்கு முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை சரியாக தயாரிக்காமை | 2.2.1 |
| | | 2. | பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை | 2.10 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பான போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமையொன்று தோற்றுவிக்கப்பட வேண்டும் | 1. | முகாமைத்துவக் குறைபாடுகள் | 2.6 |
| | | 2. | தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் | 2.5 |
| | | 3. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்படாமை | 2.13 |
| | | 4. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல் | 2.14(அ) |
| | | 5. | பதவியணியினரை சேர்த்துக்கொள்ளுதல் | 2.14(ஆ) |

| | | | |
|---|---|---|---|
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகளை சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்துதல். | 1. பெறுகை செயன்முறையை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்<br>2. உள்ளகக் கணக்காய்வு | 2.3<br>2.12 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அவற்றை கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதியேற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படுதல் | வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை | 2.2.3 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சில் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் பெறப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.7 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை மிகவும் கவனத்துடன் செயற்பட்டு அமைச்சில் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | இலஞ்ச சுற்றிவளைப்புக்களின் போது இலஞ்சங்களை பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கிலுள்ள குறைபாடுகள் | 2.9 |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும்,<br>நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள | நிதி நடவடிக்கைகளிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெறப்படாமை | 2.15 |

பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 ஆணைக்குழுவின் பிரதான செயற்பணிகள்

(அ) 1954 இன் 11 ஆம் இலக்க இலஞ்ச அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட ஆதனங்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல்கள் மற்றும் முறையற்ற விதத்தில் சொத்துக்களை சுவீகரித்தல் குற்றங்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்தல்.

(ஆ) இலஞ்சம், ஊழல்கள் மற்றும் சொத்துக்களை சுவீகரித்தல் குற்றங்கள் தொடர்பாக நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் இலஞ்ச அதிகாரச்சட்டத்தின் கீழ் வழக்குகளை தொடர்தல் மற்றும் வழிநடாத்துதல்.

(இ) மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மேன்முறையீட்டு வழக்குகளிற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ஈ) இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இலஞ்சத்திற்கெதிராக நடவடிக்கை எடுத்தல்.

### 2.2 செயலாற்றல்

#### 2.2.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவின் 04 எதிர்பார்க்கப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மீது பினவரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan), செயற்படுத்தப்பட்ட காலப்பகுதி (Time Line) மற்றும் செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள்/ பெறுபேறுகள் (Output/ Outcome) மதிப்பீடு செய்யப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வு திட்டம் (Internal Audit Plan) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமை

வாகன தரிப்பிடத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைக்காக 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ரூபா 3 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 வரையிலும் அந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு தொடர்பான செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் ஆணைக்குழுவால் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் இது 2018 யூலை 10 வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறுகைச் செயன்முறையை அமுல்ப்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், வேலைகளிற்கான ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்தும் போது முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டில் கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம் - புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்தின் கீழான 04 செயற்திட்டங்கள் தொடர்பாக அவ்வாறு எழுத்து மூலமான இணக்கப்பாடொன்றோ அல்லது உடன்படிக்கையோ ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், கட்டிடத் திணைக்களம் 2017 ஆம் ஆண்டின் போது அச்செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங்களை பூர்த்திசெய்திருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கோவையின் 5.4.4(1) ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்த வேலைகளிற்கான முற்பணக் கொடுப்பனவிற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்தினை சமர்ப்பிப்பதன் அடிப்படையில் ஒப்பந்த தொகையில் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தில் ஆகக்கூடியது இருபது சதவீதம் (20%) மாத்திரம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், பழைய இரண்டு மாடிக் கட்டிடத்தின் திருத்தங்களிற்காக ரூபா 1.48 மில்லியன் (வரி உள்ளடங்கலாக) மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு மதிப்பிடப்பட்ட பெறுமதியை விஞ்சி ரூபா 1.5 மில்லியன் முற்பணங்கள் கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கோவையின் 7.1.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பெறுகைகளிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் சம்பளப் பட்டியல் அச்சிடும் இயந்திரம் மற்றும் கணனி உபபாகங்களின் பெறுகைகளிற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கோவையின் 3.12.2(11) ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், ஆளணி, உபகரணம் போன்ற வளங்களும் நிர்மாணம் மற்றும் உற்பத்தி வசதிகளும் காணப்படுவதாக கேள்வியாளர்களின் முற்தகைமை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவால் 2017/2018 ஆம் ஆண்டுகளில் சபையின் துப்பரவாக்கல் சேவையை பேணுவதற்காக நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்காக 2017 மார்ச்சில் மேற்கொள்ளப்பட்ட பெறுகையின் போது துப்பரவாக்கல் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றின் முக்கிய காரணியாக உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை கருத்திற்கொள்ளாமல் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு அதன் மீதான அறிக்கைகள் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 இற்கு முன்னர் ஆணைக்குழுவால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் குறிப்பிட்ட அறிக்கைகள் 2018 யூன் 06 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2016 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவால் உரித்தாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான மெய்மையாய்வு 2016 ஆம் ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2016 ஆம் ஆண்டின் 154(6) அறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம், ஆணைக்குழுவானது நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபித்திருக்கவில்லை.

## 2.6 முகாமைத்துவ பலவீனங்கள்

ஆணைக்குழுவானது களஞ்சியத்தில் பொருட்களிற்கான முறையான பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்ட இடத்தில் போதுமான இடவசதியுடன் களஞ்சியமொன்றை முறையாக பேணியிருக்கவில்லை.

## 2.7 கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின் போது ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் அவற்றின் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காட்டப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 163.57 | 161.71 | 1.86 | 1.14 |
| | மூலதனம் | 28.02 | 18.96 | 9.06 | 32.33 |
| | **மொத்தம்** | **191.59** | **180.67** | **10.92** | **5.70** |
| **2014** | மீண்டுவருபவை | 183.37 | 180.06 | 3.31 | 1.80 |
| | மூலதனம் | 17.27 | 16.07 | 1.20 | 6.95 |
| | **மொத்தம்** | **200.64** | **196.13** | **4.51** | **2.25** |
| **2015** | மீண்டுவருபவை | 245.50 | 225.16 | 20.34 | 8.29 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதனம் | 46.45 | 31.17 | 15.28 | 32.90 |
| | **மொத்தம்** | **291.95** | **256.33** | **35.62** | **12.20** |
| **2016** | மீண்டுவருபவை | 273.40 | 272.58 | 0.82 | 0.30 |
| | மூலதனம் | 135.70 | 44.86 | 90.84 | 66.94 |
| | **மொத்தம்** | **409.10** | **317.44** | **91.66** | **22.41** |
| **2017** | மீண்டுவருபவை | 332.36 | 330.91 | 1.45 | 0.44 |
| | மூலதனம் | 42.60 | 35.45 | 7.15 | 16.78 |
| | **மொத்தம்** | **374.96** | **366.36** | **8.60** | **2.29** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்தாமை**

மீளாய்வாண்டின் மூலதன செலவின விடயத்திற்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 07 மில்லியன் நிதியேற்பாடுகளில் 97 சதவீதம் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய 01001 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்குறைந் த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்கூடி ய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 7.50 | 6.98 | 4.00 | 4.50 | 30.00 | 2.47 |

### 2.9 இலஞ்ச சுற்றிவளைப்புக்களின் போது இலஞ்சமாக பயன்படுத்துவதற்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய 01002 ஆம் விடய இலக்கத்தின் கீழான இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்குறைந் த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்கூடி ய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 150.00 | 3.11 | 2.00 | 2.69 | 275.00 | 18.95 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 1,784,155 முற்பணங்கள் தொடர்பாக நீதிமன்ற தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அம்முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் வேறு மேன்முறையீட்டிற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டதனால் 2 ஆண்டு காலப்பகுதிக்காக அம்முற்பணங்கள் நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்ததென ஆணையாளர் நாயகம் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற வழக்குப் பொருட்களிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் நீதிமன்ற வழக்குப் பொருட்களின் மீதியாக ரூபா 219,000 பெறுமதியான 10 வகையான நீதிமன்ற வழக்குப் பொருட்கள் காணப்பட்ட போதிலும், அம்மீதி 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்த பொருள் மெய்மையாய்வு மூலம் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

ஆணைக்குழுவால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் குறித்த சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச்சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 வது பின்னிணைப்பின் பிரகாரமான நிலையான சொத்துக்கள் பதிவேடு | முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனி, துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.11 இணங்காமைகள்**

**அரசாங்க நிதிப்பிரமாணங்களுடன் இணங்காமை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம், ஆணைக்குழுவின் ஒரு திணைக்களத்திலிருந்து வேறொரு திணைக்களத்திற்கு பொருட்களை மாற்றும் போது திணைக்களத்தால் பெறப்பட்ட அனைத்துப் பொருட்களும் பொருளிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் பொருளிருப்பு பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவரது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை ஆற்றுவதற்காக அவரது திணைக்களங்களில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென நிதிப்பிரமாணம் 133 இன் மூலம் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.14 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினல் ஆளணி வேதனங்கள் செலவின விடயத்திற்காக ரூபா 264.79 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 69 | 37 | 32 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 282 | 19 | 263 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 582 | 242 | 340 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 130 | 73 | 57 |
| | | 1,063 | 371 | 692 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புதல்

ஆணைக்குழுவால் இரண்டாம் மட்டத்தில் 5 உத்தியோகத்தர்களும் ஆரம்ப மட்டத்தில் 01 உத்தியோகத்தரும் முறையே அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதியில் 692 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் போது அவற்றில் 200 பதவிகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி வெற்றிடங்களில் 332 இற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 160 வெற்றிடங்கள் காணப்பட்டன.

### (ஆ) பதவியணியினரைப் பயிற்றுவித்தல்

பதவியணியினரை ஒழுங்காக பயிற்றுவிப்பதற்கு தேவைப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவால் அதன் பதவியணியினர் போதியளவு பயிற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய 5 வருடங்களின் பயிற்சியளித்தல் மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல் செலவின விடயத்தின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிதியேற்பாடு | மாற்றங்கள் | தேறிய நிதியேற்பாடு | செலவினம் | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 2013 | 500,000 | - | 500,000 | 72,700 | 427,300 | 85 |
| 2014 | 600,000 | - | 600,000 | 198,500 | 401,500 | 67 |
| 2015 | 600,000 | 51,000 | 549,000 | 327,750 | 221,250 | 40 |
| 2016 | 600,000 | 70,000 | 530,000 | 212,500 | 317,500 | 60 |
| 2017 | 600,000 | 82,000 | 518,000 | 385,000 | 133,000 | 26 |

**2.15 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை**

அரச நிதி, வருமானம், முத்திரைகள் அல்லது களஞ்சியப் பொருட்களை வழங்குதல் அல்லது பெறுதல், அரச நிதியை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரைகள் அல்லது களஞ்சியப் பொருட்களை வழங்குதல் தொடர்பாக நிர்வாக ரீதியான பொறுப்புக்களை உடைய அல்லது அதிகாரம் வழங்கப்பட்டதன் கீழ் அந்நடவடிக்கை கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர், அரசாங்க கணக்குகளுக்குரிய உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்தி காசோலைகளில் கையொப்பமிடுவர். அவர்களின் கடமைகளை விசுவாசமாக ஆற்றுவதற்காக 612 ஆம் அத்தியாயம் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைகளிற்கு இணங்கவும் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரமும் ஆணைக்குழுவில் பிணை செலுத்தப்பட வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை செலுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை.